ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த
அஷ்டாதச ரஹஸ்யங்களில் பதினெட்டாவதான
முமுக்ஷுப்படி

த்வய ப்ரகரணம்

116. புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே வீடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும்நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணானுபவகைங்கர்யங்களே போதுபோக்காகையும், இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றமறிந்து உகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்ய ப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞானமும் விரக்தியும் சாந்தியும் உடையனாயிருக்கும் பரமஸாத்விகனோடே ஸஹவாஸம் பண்ணுகையும் வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதம்.
117. இந்தவதிகாரிக்கு ரஹஸ்யத்ரயமும் அநுஸந்தேயம்.
118. எல்லா ப்ரமாணங்களிலும் தேஹத்தாலே பேறென்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறென்கிறது; சரம்ஸ்லோகத்தில் ஈச்வரனாலே பேறென்கிறது; த்வயத்திலே பெரிய பிராட்டியாராலே பேறென்கிறது.
119. பெரிய பிராட்டியாராலே பேறாகையாவது இவள் புருஷகாரம் ஆனாலல்லது ஈச்வரன் கார்யம் செய்யானென்கை.
120. த்வயத்துக்கு அதிகாரி ஆகிஞ்சன்யமும் அநந்யகதித்வமும் உடையவன்.
121. இவையிரண்டும் ப்ரபன்னபரித்ராணத்திலே சொன்னோம்.
122. இதில் முற்கூற்றால் பெரியபிராட்டியாரை முன்னிட்டு ஈச்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது; பிற்கூற்றால் அச்சேர்த்தியில் அடிமை இரக்கிறது.
123. ஸ்ரீ என்று பெரிய பிராட்டியார்க்குத் திருநாமம்.
124. ஸ்ரீயதே - ச்ரயதே.
125. இதுக்கர்த்தம் எல்லார்க்குமிவளைப் பற்றி ஸ்வரூபலாபமாய், இவள் தனக்கும் அவனைப் பற்றி ஸ்வரூபலாபமாய் இருக்குமென்று.
126. இப்போது இவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக.
127. நீரிலே நெருப்பு கிளருமாபோலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக.
128. இவள் தாயாய் இவர்கள் க்லேசம் பொறுக்க மாட்டாதே அவனுக்குப் பத்னியாய் இனிய விஷயமாயிருக்கையாலே கண்ணழிவற்ற புருஷகாரம்.
129. திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன்சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே.
130. மதுப்பிலே இருவர் சேர்த்தியும் நித்யம் என்கிறது.
131. இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை.
132. ஈச்வர ஸ்வாதந்த்ரயத்தையும் சேதனனுடைய அபராதத்தையும் கண்டு அகல மாட்டாள்.
133. சேதனனுக்கு இவை இரண்டையும் நினைத்து அஞ்ச வேண்டா.

134. இத்தால் ஆச்ரயிக்கைக்கு ருசியே வேண்டுவது, காலம் பார்க்க வேண்டாவென்கிறது.

135. இவள் சன்னிதியாலே காகம் தலை பெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்.

136. புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ரயம் தலைசாய்ந்தால் தலை எடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயண பதம்.

137. அவையாவன - வாத்ஸல்யமும் ஸ்வாமித்வமும் ஸௌசீல்யமும் ஸௌலப்யமும் ஜ்ஞானமும் சக்தியும்.

138. குற்றம் கண்டு வெருவாமைக்கு வாத்ஸல்யம்; கார்யம் செய்யுமென்று துணிகைக்கு ஸ்வாமித்வம்; ஸ்வாமித்வம் கண்டு அகலாமைக்கு ஸௌசீல்யம்; கண்டு பற்றுகைக்கு ஸௌலப்யம்; விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞானசக்திகள்.

139. இங்கு சொன்ன ஸௌலப்யத்துக்கு எல்லைநிலம் அர்ச்சாவதாரம்.

140. இது தான் பர வ்யூஹ விபவங்கள் போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படி இருக்கும்.

141. இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம்.

142. திருக்கையாலே பிடித்த திவ்யாயுதங்களும் வைத்தஞ்சலென்ற கையும் கவித்த முடியும் முகமும் முறுவலும் ஆஸனபத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்.

143. ரக்ஷகத்வ போக்யத்வங்கள் இரண்டும் திருமேனியில் தோற்றும்.

144. “சரணௌ” - திருவடிகளை.

145. இத்தால் சேர்த்தி அழகையும் உபாய பூர்த்தியையும் சொல்லுகிறது.

146. பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது; திண்கழலாய் இருக்கும்.

147. சேஷிபக்கல் சேஷபூதன் இழியும் துறை; ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாபோலே.

148. இத்தால் பிராட்டிக்கு இருப்பிடமாய் குணப்ரகாசகமுமாய் சிசுபாலனையுமகப்படத் திருத்திச் சேர்த்துக் கொள்ளும் திருமேனியை நினைக்கிறது.

149. “சரணம்” - இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக.

150. இத்தால் ப்ராப்யம் தானே ப்ராபகம் என்கிறது.

151. கீழ் சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே.

152. இவன் செயலறுதியாலே உபாயம் ஆக்குகிறானித்தனை.

153. “சரணௌ ஷரணம்” என்கையாலே உபாயாந்தரவ்யாவ்ருத்தமான உபாயமென்கிறது.

154. “ப்ரபத்யே” - பற்றுகிறேன்.

155. வாசிகமாகவும் காயிகமாகவும் பற்றினாலும் பற்றுக்கு இழவில்லை; ஜ்ஞானாத் மோக்ஷமாகையாலே மானஸமாகக் கடவது.

156. உபாயம் அவனாகையாலும் இவை நேரே உபாயமல்லாமையாலும் இம்மூன்றும் வேணுமென்கிற நிர்பந்தமில்லை.

157. வர்த்தமான நிர்த்தேசம் ஸத்வம் தலையெடுத்து அஞ்சினபோது அனுஸந்திக்கைக்காக.

158. உபாயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும் காலக்ஷேபத்துக்கும் இனிமையாலே விடவொண்ணாமையாலும் நடக்கும்.

159. பேற்றுக்குப் பலகாலும் வேணுமென்று நினைக்கில் உபாயம் நழுவும்.

160. உத்தர வாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது.

161. ப்ராப்யாந்த்ரத்துக்கு அன்றென்கை.
162. உபாயாந்தரங்களை விட்டு சரமோபாயத்தைப் பற்றினாப் போலே உபேயாந்தரமான ஐச்வர்ய கைவல்யங்களை விட்டு எல்லையான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது.
163. இவனர்த்திக்க வேணுமோ? ஸர்வஜ்ஞன் இவன் நினைவறியானோவென்னில்.
164. இவன் பாசுரம் கேட்டவாறே திருவுள்ளம் உகக்கும்.
165. ஸ்ரீமதே.
166. பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு.
167. அவன் உபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாயிருக்கும்; அவன் ப்ராப்யனாமிடத்தில் தான் ப்ராப்யையுமாய் கைங்கர்ய வர்த்திகையுமாயிருக்கும்.
168. இதிலே திருமந்த்ரத்தில் சொன்ன ப்ராப்யத்தை விசதமாக அநுஸந்திக்கிறது.
169. இளைய பெருமாளைப் போலே இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை.
170. அடிமை தான் சித்திப்பதும் ரஸிப்பதும் அச்சேர்த்தியிலே.
171. "நாராயணாய".
172. ஸர்வசேஷியாய் உள்ளவனுக்கு.
173. இதிலே திருமேனியையும் குணங்களையும் சொல்லும்.
174. சேஷித்வத்திலே நோக்கு.
175. ப்ராப்த விஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது.
176. இந்த சதுர்த்தி கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது.
177. கைங்கர்யம் தான் நித்யம்.
178. நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும்.
179. சேஷிக்கு அதிசயத்தை விளைக்கை சேஷபூதனுக்கு ஸ்வரூபலாபமும் ப்ராப்யமும்.
180. "நம:"
181. கைங்கர்யத்தில் களையறுக்கிறது.
182. களையாவது தனக்கென்னப் பண்ணுமது.
183. இதிலே அவித்யாதிகளும் கழியுண்ணும்.
184. உனக்கே நாமாள்செய்வோம் என்னும்படியேயாக வேணும்.
185. ஸௌந்தர்யமந்தராயம்; கீழ்ச் சொன்ன கைங்கர்யமும் அப்படியே.
186. கைங்கர்ய ப்ரார்த்தனைபோலே இப்பதத்தில் ப்ரார்த்தனையுமென்றுமுண்டு.
187. "மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு" என்னா நின்றதிறே.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்